







க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான,

# மணிமேகலை

## “ மணிமேகலாத் தெய்வம் வந்து தோன்றிய காதை”





# தமிழ்


தொகுப்பு..

ஆசிரியர்: திரு. இ. அநூஷன் [National Dip.in.Teach]

(தொடர்புகளுக்கு 077-4323124)

# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான

## மணிமேகலை

*பாரதி படிப்பகம்*




மணிமேகலை கதைசுருக்கம்.

ஐம்பெரும் காப்பியம்

**தமிழில் வழங்கும் ஐம்பெருங்காப்பியங்களுள் இது இரண்டாவது**. சிலப்பதிகாரத் தலைவன் **கோவலனுக்கு மாதவியிடத்துப் பிறந்தவளான மணிமேகலையைக் காவியத் தலைவியாகக் கொண்டமையால், அவள் பெயராலேயே இந்நூலும்** அறியப்படுகிறது. **மணிமேகலை துறவு** என்பது ஆசிரியர் இட்ட பெயர் என்று கூறுவர். இது **சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகக்** கருதப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் பாத்திரங்கள் பல இதிலும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. **ஒரே குடும்பத்தின் கதையென்பதால், சிலப்பதிகார சாரத்தையும் இதனையும் இணைத்து இரட்டைக் காப்பியங்கள்** என வழங்குவர்.

**நூலாசிரியர்:**

இதனை இயற்றியவர் **வளம்கெழு கூலவாணிகன் சாத்தன், மதுரைக் கூல வாணிகன் சாத்தன், சீத்தலைச் சாத்தன்** என்று பலவாறு கூறப்படுகிறார். அகநானூறு, நற்றிணை, புறநானூறு ஆகிய நூல்களில் சில செய்யுட்களை இயற்றியவரும் கூலவாணிகன் சாத்தன் எனப்படுகிறார். ஆயினும் இவர் மணிமேகலை ஆசிரியரிலிருந்து வேறானவர்என்பர்.

**சீத்தலை என்னும் ஊரினரான இவர், மதுரையில் பதினெண் கூலங்களை விற்று வாழ்ந்தார் (கூலம்-தானியம்) என்பது பற்றிக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் எனப்பட்டார்**. பிழையான செய்யுட்களைக் கேட்டபோதெல்லாம் எழுத்தாணியால் குத்திக் கொண்டமையால், அவர் தலையில் எப்பொழுதும் சீழ் நிறைந்திருந்தது என்றும், அதனால் அவர் **சீத்தலை** என்ற அடைமொழி பெற்றார் என்றும் கூறுவர். இது தவறான கருத்தாகும். இவர் **இளங்கோவடிகளின் நண்பர்** என்றும், அவர் படைத்த சிலம்பை முதலில் கேட்டவர் இவரே என்றும் கூறுவர். அவ்வாறே, இவருடைய இக்காவியத்தை இளங்கோவடிகள் கேட்டார் என்பர். இதனை மறுப்பார் உளர்.

**மணிமேகலையின் அமைப்பு:**

மணிமேகலை **'விழாவறை காதை'** முதல் **'பவத்திறம் அறுக எனப் பாவைநோற்ற காதை'** முடிய **முப்பது காதை**கள் கொண்டது. இது சிலப்பதிகாரம் போல் பல செய்யுள் வகைகளைக் கொண்டதன்று. இது முழுவதும் **அகவற்பாவாலான** காவியமாகும். **இதற்கும் சிலப்பதிகாரத்திற்கு உள்ளவாறே ஒரு பதிகம்** அமைந்துள்ளது. இது, கதை நிகழ்வுகளைத் தொகுத்துக் கூறுகிறது. மணிமேகலை துறவு என்ற பெயர் இதில்தான் காணப்படுகிறது.

**கதாப்பாத்திரங்கள்:**

**மணிமேகலை -** கோவலன் மாதவி தம்பதியின் மகள். இரத்தத்திலேயே ஊறிய துணிச்சல், பண்புகள் அதிகம் பெற்றவள். துறவியாகவேண்டும் என்று கூறிய புத்த மதப் பிக்குணி, ஒரு புறமும், தன்னை மோகத்தினால் பின்தொடர்ந்த சோழ மன்னன் மறுபுறமும் இருந்தும், மணிமேகலை அனைத்துத் தடைக்கற்களையும் துணிச்சலுடன் உடைத்தெறிந்தாள். பிறகு தன் விருப்பப்படியே புத்தத் துறவியாகி மக்களின் பசியைப் போக்குவதையே தன் கடமையாகக் கொண்டு வாழ்ந்த மணிமேகலை, அவள் மறைவிற்கு பின் தெய்வமாகப் போற்றப்பட்டாள். கோவலன் இரத்தத்தில் பசுமரத்தாணி போல் பதிந்திருந்த வீரம் மணிமேகலையிடம் இருந்ததால்தான் இது சாத்தியமானது. மாதவியைப் போல் மணிமேகலையிடம் அளவற்ற பண்புகள் இருந்தமையால்தான், தனது தாயார், ஆசான் மற்றும் ஞானபிதாவின் பேச்சை மதித்து நடக்கிறாள். இக்காப்பியமே மணிமேகலை பெரியவர்களின் பேச்சைக் கேட்டு நடப்பதை மூலமாகக் கொண்டுள்ளது.

**உதயகுமரன் -** சோழ மன்னன், மணிமேகலையின் மீது முட்டாள் தனமான மோகம் கொண்டவன். நினைத்ததை அடையவேண்டும் என்ற குணம் படைத்தவன். ஆசை இருக்கலாம் ஆனால் வெறித்தனமான ஆசை இருந்தால் அழிவு நிச்சயம் என்பதை உதயகுமரன் கதாப்பாத்திரம் காட்டியுள்ளது. மணிமேகலையின் மேல் காதல்கொண்ட உதயகுமரன் அவளது துறவியாக வேண்டும் என்ற ஆசையை அறிந்தும் கூட அவளைப் பின்தொடர்ந்தான். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகளால், கஞ்சணன் என்பவன் உதயகுமாரனைக் கொலை செய்துவிட்டான்.

**சுதமதி -** மணிமேகலையின் நம்பகமான தோழி. மணிமேகலையை மணிபல்லவத்தில் விட்டு, அவளை ஆன்மீகப் பாதையில் செலுத்தியதை மேகலையின் தாயாரிடம் கூடக் கூறாமல், சுதமதியின் கனவிலேயே முதலில் தோன்றி நடந்ததை கூறினாள், கடலின் கடவுள் மணிமேகலா. இது சுதமதியின் மேல் மணிமேகலா வைத்திருக்கும் நம்பிக்கையை காட்டுகிறது. இக்காப்பியத்திலேயே மணிமேகலையின் ஒரே தோழி சுதமதிதான். அக்காலக்கட்டங்களில் நண்பர்களுக்கெல்லாம் ஒரு இலக்கணமாக அமைந்தவள் சுதமதி. அவளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியவை பல உண்டு.



**<u>கதைச் சுருக்கம்</u>.**

கோவலன் மதுரை மன்னனால் கொல்லப்பட்ட செய்தி கேட்ட மாதவி, உலக வாழ்வை வெறுத்தாள்; புத்தர் நெறியைத் தழுவினாள். மேலும் அழகும் இளமையும் கொண்ட தன் மகள் மணிமேலையையும் துறவியாக்கினாள். புகாரில் இந்திர விழா வந்தது. புத்தபகவானை வழிபட மலர் பறிக்க மணிமேகலையும் அவள் தோழி சுதமதியும் உவ வனத்திற்குச் (பூங்காவிற்குச்) சென்றபோது சோழ இளவரசன் உதயகுமரன் அவளைப் பின் தொடர்ந்தான். மணிமேகலை ஒரு பளிங்கு அறையுள் புகுந்து தப்புகிறாள்.

இந்திரவிழாக் காண வந்த மணிமேகலா தெய்வம் அவளை வான்வழியே எடுத்துச் செல்கிறது. மணிபல்லவத் தீவில் அவளுக்குப் பழம்பிறப்பை உணர்த்துகிறது. தீவதிலகை என்பவள் அறிவுரைப்படி மணிமேகலை அமுதசுரபி என்னும் அற்புதப் பாத்திரத்தைப் பெற்று மீண்டும் புகார் நகருக்கு வருகிறாள். தன் தாயுடனும், சுதமதியுடனும் அறவண அடிகளைச் சந்திக்கிறாள். அவர் அவளுக்கு ஆபுத்திரன் கதையை எடுத்துரைக்கிறார். பசிப்பிணி நீக்கும் அறத்தைச் செய்யுமாறு அறிவுறுத்துகின்றார். காயசண்டிகை என்பாள் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதற் பிச்சை பெறுகிறாள். ஆதரவு அற்றவர்களுக்கும், காலில்லார், கண்ணில்லார், காது கேளாதார் முதலியோர்க்கும் உணவளிக்கும் அறப்பணியைத் தொடர்கிறாள். உலக அறவி என்ற இடத்திற்கு அவள் சென்றபொழுது, உதயகுமரன் அவளைத் தொடர்கிறான். தன் மந்திர வலிமையால் காயசண்டிகை வடிவத்தை அவள் மேற்கொள்கின்றாள். சிறைச்சாலைக் கைதிகட்கு உணவூட்டுகிறாள். அரசன் இவள் அறிவுரை கேட்டுச் சிறையை அறச்சாலை ஆக்குகிறான். காயசண்டிகை வடிவில் இருப்பவள் மணிமேகலையே என்று உணர்ந்த உதயகுமரன் அவளை மீண்டும் காணப் போனபோது, அவள் அவனுக்கு அறிவுரை கூறுகிறாள். அப்போது காயசண்டிகையின் கணவன் காஞ்சனன் என்பவன் கைவாளால் உதயகுமரன் இறக்கிறான். மணிமேலை சிறை செய்யப்பட்டு பல துன்பங்கட்கு ஆளாக்கப்படுகிறாள். அரசமாதேவி செய்த தீமைகளையெல்லாம் தன் தவ வலிமையால் வென்று அவளுக்கு அறிவுரை கூறுகின்றாள். எல்லா உயிர்க்கும் அன்பு செய்யுமாறு அவளுக்கு அறிவுறுத்துகின்றாள். பின்னர் ஆபுத்திரன் அரசனாக ஆளும் நாகபுரம் செல்கிறாள். அவனுடன் மணிபல்லவத்திற்கு வருகிறாள். ஓர் ஆண் வடிவம் தாங்குகின்றாள். பல சமயவாதிகளிடம் அவரவர் சமயத் தத்துவங்களையும் கேட்டறிகின்றாள். கச்சி மாநகரில் இருந்த அறவண அடிகளைத் தன் தாயுடன் அடைகிறாள்; அவரை வணங்குகின்றாள். அவர் அவளுக்குப் புத்த தருமத்தைப் போதித்தார். இறுதியாகத் தவ நெறியை மேற்கொண்டு, தன் பிறவிப் பிணி நீங்குமாறு முயல்கின்றாள். இக்காவியத்தில் ஆதிரை, ஆபுத்திரன், சுதமதி, விசாகை, மருதி முதலானோர் பற்றிய கிளைக்கதைகளும் உண்டு. இவை மூலக்கதையோடு தொடர்புற்றுக் கதைக்குச் சுவையூட்டுகின்றன.

**மணிமேகலை கூறும் தலைமையான அறம்**



"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" என்பதுதான். இதன் பொருள், **உலகில் வாழ்கின்றவர்களுக் கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிர் கொடுத்தோராவர்** என்பதாகும். **மணிமேகலை பௌத்த சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன்** எழுதப்பெற்ற நூல். சங்க காலத்தில் ஆளுமை பெறாத சமய உணர்வு படிப்படியாக வளர்ந்திருப்பதை மணிமேகலை காட்டுகிறது. **சிலப்பதிகாரத்தில் கவுந்தி சமணத் துறவியாகக்** காட்சி தருகிறார் ; அவரும்கூடக் கண்ணகியின் ஆற்றலுக்குக் குறைந்தவராகவே காட்டப் பெறுகிறார். மணிமேகலையின் கதைத் தலைவியே பௌத்த சமயத்தைப் பரப்புகின்றாள்.

தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சமயம் மனித வாழ்வில் பேரிடம் பெற்றதை மணிமேகலை வெளிப்படுத்துகிறது.

மணிமேகலை பத்தினிப் பெண்களை மூவகைப்படுத்திக் கூறுகின்றது.

1. கணவன் இறந்தவுடன் எரி மூழ்கி இறப்பவர்,
2. தனியே எரி வளர்த்து இறப்பவர்,
3. கணவனை நினைந்து கைம்மை நோன்பேற்பவர். என மணிமேகலை இவர்களை வகைப்படுத்துகின்றது.

மணிமேகலை மனிதர் உடம்பை இழிவானதாகக் கருதி உரைக்கின்றது . உடம்பு புலால் நிறைந்தது; மூத்துத் தளர்வது; பிணி கூடுவது; குற்றம் புரிவது; கவலையின் கொள்கலம் என்று கூறி இதனைப் புறக்கணிப்பதே சரியானது என்கின்றது.

**(119 - 122 வரையான செய்யுள் அடிகள்)**

<u>குண திசை மருங்கில் நாள் முதிர் மதியமும்</u>
<u>குட திசை மருங்கில் சென்று வீழ் கதிரும்</u>
<u>வெள்ளி வெண் தோட்டொடு பொன் தோடு ஆக</u>
எள் அறு திருமுகம் பொலியப் பெய்தலும்

கீழ்த்திசைப் பக்கத்தில் பூரணச் சந்திரனும், மேற்றிசைப் பக்கத்தில் சென்று மறைகின்ற கதிரவனும், வெள்ளியாகிய வெண் தோட்டோடு பொன்னாலாகிய தோடுமாக இரு புறமும் விளங்க, இகழ்தலற்ற தன் அழகிய முகமானது பொலியுறுமாறு அணிந்து கொள்பவள் புகார்ப் பெண்.

**(123 - 132 வரையான செய்யுள் அடிகள்)**

அன்னச் சேவல் அயர்ந்து விளையாடிய
தன்னுறு பெடையைத் தாமரை அடக்க
பூம் பொதி சிதையக் கிழித்துப் பெடை கொண்டு
ஓங்கு இருந் தெங்கின் உயர் மடல் ஏற
அன்றில் பேடை அரிக் குரல் அழைஇ
சென்று வீழ் பொழுது சேவற்கு இசைப்ப
<u>பவளச் செங் கால் பறவை</u>க் கானத்து
குவளை மேய்ந்த குடக் கண் சேதா
முலை பொழி தீம் பால் எழு துகள் அவிப்ப
கன்று நினை குரல மன்று வழிப் படர

அன்னச் சேவலானது தன்னுடன் மெய்ம்மறந்து விளையாடிய தனது பெடையைத் தாமரை மலரானது குவிந்து அடக்கிக் கொள்ளக் கண்டு பூவின் பொதிதலைக் கிழித்துப் பெடையை மீட்டுக் கொண்டு உயர்ந்திருந்த பெரிய தென்னையின் வளர்ந்திருந்த மடலிலே சென்று ஏறியிருக்கவும், அன்றிப் பெடையானது மெல்லிய குரலில் தனது சேவலுக்கு அந்திப் பொழுது சென்று மறைவதைப் பற்றி எடுத்துக் கூறவும், பவளம் போன்ற செந்நிறக் கால்களைகளையுடைய அன்னப் பறவைக் கூட்டத்திலே உள்ள குவளை மலர்களை மேய்ந்த திரட்சியான காண்களையுடைய செவ்விய பசுக்கள், தம் முலைகளிலிருந்து பொழிகின்ற இனிய பால், அவை நடந்து செல்வதால் எழுகின்ற புழுதியைத் தணிக்கவும், தம் கன்றுகளை நினைந்து குரல் எழுப்பியவாறு தமது இல்லத் தொழுவங்களை நோக்கி அவை செல்லத் தொடங்கவும்,



**(133 - 141 வரையான செய்யுள் அடிகள்)**

அந்தி அந்தணர் செந் தீப் பேண
பைந் தொடி மகளிர் பலர் விளக்கு எடுப்ப
யாழோர் மருதத்து இன் நரம்பு உளரக்
கோவலர் முல்லைக் குழல் மேற்கொள்ள
**<u>அமரக மருங்கில் கணவனை இழந்து</u>**
**<u>தமர் அகம் புகூஉம் ஒரு மகள் போல</u>**
கதிர் ஆற்றுப்படுத்த முதிராத் துன்பமோடு
**<u>அந்தி என்னும் பசலை மெய்யாட்டி</u>**
வந்து இறுத்தனளால் மா நகர் மருங்கு என்

அந்தணர்கள் மாலைப் பொழுதுக்குரிய செந்தீயினை வளர்க்கத் தொடங்கவும், பசிய வளையல் அணிந்த இல்லத்து உறைகின்ற மகளிர் பலரும் மனை விளக்குகளை ஏற்றி வைக்கத் தொடங்கவும், யாழிசைப்போராகிய பாணர்கள் யாழ் நரம்புகளை மீட்டி இனிய மருதப் பண்ணினை எழுப்பவும், இடையர்கள் தம் புல்லாங் குழலினூடு முல்லைத் தீம் பண்ணினை மேற் கொள்ளவும், போர்க்களத்தில் தம் கணவனை இழந்து, தமது உறவினர் இல்லம் ஏகுகின்ற ஒப்பற்றதொரு பெண்ணைப் போல, தன் காதலனாகிய கதிரவனை மறைந்து செல்ல விடுத்த நீங்காத துன்ப நினைவோடு, அந்திப் பொழுதென்னும் பசலை நோயினைப் போர்த்த மேனியையுடைய மாலை என்பவள் அம் புகார் நகரினிடத்தே வந்த தங்குவாளாயினள்.

## <u>மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதைப் பகுதியில் வினாவப்படக்கூடிய மாதிரி வினாக்கள்.</u>

01. மணிமேகலை இலக்கியம் தொடர்பாக சிறுகுறிப்பு வரைக.
02. இவ் இலக்கியம் தோன்றிய காலப்பின்னனியை விளக்குக.
03. மணிமேகலை இலக்கியத்தின் ஆசிரியர் யார்?, அவர் தொடர்பாக கருத்துக் கூறுக.
04. மணிமேகலை இலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
05. மணிமேகலை இலக்கியத்தில் வலியுறுத்திக் கூறப்படும் அறக்கருத்துக்களை விபரிக்குக.
06. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை பற்றி கருத்துரைக்குக.
07. இப்பாடல்களினூடாக வெளிப்படும் பூகார் நகரச் சிறப்பினை தருக.
08. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதைப் பகுதியில் வெளிப்படும் அந்திப் பொழுதுக் காட்சிகளை விளக்குக.
09. இப் பகுதியில் இடம்பெற்றுள்ள அணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.
10. இப் பகுதியில் வெளிப்படும் ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பம்சங்களை விளக்குக.